சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08
ந.க.எண்.8326/ஆ2/2024, நாள்.24.10.2024

பொருள்: பள்ளிக்கல்வி- சென்னை மாவட்டம்- மாநில குழந்தைகள் அறிவியல் மாநாடு- 2024(CSC) அனைத்து வகை பள்ளி அறிவியல் வழிகாட்டி ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம்- 05.11.2024 அன்று நடைபெறுதல்- அறிவியல் வழிகாட்டி ஆசிரியர்களை கலந்துகொள்ள அறிவுறுத்தல்- சார்ந்து.

பார்வை: சென்னை-86, கோபாலபுரம், தென் சென்னை மாவட்டம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் (TFSF), மாவட்ட ஒருங்கிணைப்பாளரின் கடிதம் நாள். 19.10.2024 மற்றும் 22.10.2024.

.....

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறை இணைந்து தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டினை (National Childern's Science Congress) கடந்த 32 ஆண்டுகளாக தொடர்ந்து ஒருங்கிணைத்து வருகின்றது என்றும், மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் சீரிய பணியை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக பார்வையில் காண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 10 முதல் 17 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் அறிவியல் மாநாடு நடத்தப்பட்டு வருவதாகவும், இந்த ஆண்டிற்கான கருப்பொருள் "நீர் மேலாண்மை" என்றும், இந்த தலைப்பில் ஆய்வினை மேற்கொள்ள வழிகாட்டி ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான மாவட்ட அளவிலான வழிகாட்டி ஆசிரியர் பயிற்சி முகாம் வரும் 05.11.2024 அன்று கீழ் குறிப்பிட்ட இடத்தில் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | நிகழ்விடம் | நடைபெறும் நாள் | நேரம் |
|---|---|---|---|
| 1. | S.B.O.A மேல்நிலைப் பள்ளி,<br>அண்ணா நகர்,<br>சென்னை-86. | 05.11.2024 | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை |

இந்நிகழ்வில் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு போதிக்கும் **ஒரு அறிவியல் ஆசிரியரை** பங்கேற்க வேண்டும். இப்பயிற்சி முகாமில் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மாணவர்களை ஆய்விற்கு தயார்படுத்தும் விதத்தில் ஒருங்கிணைந்த பயிற்சி வழங்கப்படும். ஆசிரியர்கள் தங்களுக்கான மதிய உணவினை கொண்டு செல்ல அன்புடன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காண் பொருள் சார்ந்து மாணவர்களுக்கு வழிகாட்டி ஆசிரியராக செயல்பட அனைத்து வகையான அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் ஆகிய பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளியில் இருந்தும் ஒரு ஆசிரியரை கலந்துகொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வையில் காண் கடித நகல்

தொடர்புக்கு :

ஒருங்கிணைப்பாளர்கள்

க. மலர்விழி - 87789 61607

அனிதா ஆனந்த் - 98414 72551

Email: tnsfsouthchennai@gmail.com

24-10-24

முதன்மைக்கல்வி அலுவலர்

இ ப

சென்னை

1/10/2024

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   (இடைநிலை, தனியார் மற்றும் தொடக்கக்கல்வி ),
   சென்னை மாவட்டம்.
2. பள்ளித் தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள்,
   அனைத்து வகை பள்ளிகள்,
   சென்னை மாவட்டம்.

நகல்

சென்னை-86, கோபாலபுரம், தென் சென்னை மாவட்டம் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளருக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகின்றது.

008377 8326/2024

தமிழ்நாடு அறிவியல் இயக்கம்
தென் சென்னை மாவட்டம்
245, அவ்வை சண்முகம் சாலை
கோபாலபுரம், சென்னை – 600086

Tamil Nadu Science Forum
South Chennai District
245, Avvaishanmugam salai
Gobalapuram, Chennai - 86

22/10/24
To: PA HS

Circular to all DEOs
Inform to all Schools HMs
23.10.24

Reg No : 21/81

Date: 22-10-2024

## குழந்தைகள் அறிவியல் மாநாடு-2024 (CSC)

To
முதன்மை கல்வி
அலுவலர் அவர்கள்,
ஒருங்கிணைந்த
பள்ளிக் கல்வி,
சென்னை மாவட்டம்.

23 OCT 2024

பொருள் : குழந்தைகள் அறிவியல் மாநாடு- 2024 (CSC),
வழிகாட்டி ஆசிரியர்களுக்கான சென்னை மாவட்ட பயிற்சி முகாம்
நவம்பர் 5 அன்று அறிவியல் ஆசிரியர்களை அனுப்பி வைக்க கோருதல் தொடர்பாக.

வணக்கம்

கடந்த 32 ஆண்டுகளாக, National Council for Science and Technology Communication - NCSTC, Department of Science and Technology (DST) Govt. of India இணைந்து தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டை (NCSC) 10 முதல் 17 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு நாடு முழுவதும் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் இந்த நிகழ்வின் மாநில ஒருங்கிணைப்பாளராக தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இவ்வாண்டிற்கான மையக்கருத்து நீடித்த நிலையான நீர் மேலாண்மை (நீர் கல்வி) இக்கருத்தை சார்ந்த உபதலைப்புகளில் பள்ளிக் குழந்தைகள் வழிகாட்டி ஆசிரியரின் மேற்பார்வையில் ஆய்வுகளை மேற்கொண்டு டிசம்பர் மாத இறுதியில் நடைபெறும் மாவட்ட மாநாட்டில் சமர்ப்பிப்பார்கள்.

முதல் கட்டமாக வழிகாட்டி ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் கீழ்குறிப்பிட்ட படி திட்டமிடப்பட்டுள்ளது

தேதி: நவம்பர் 5 (செவ்வாய் கிழமை)

நேரம்: காலை 10 முதல் மாலை 4 வரை

இடம்: Rajeev Gandhi Auditorium, SBOA Matric HSS, Anna Nagar,

இப் பயிற்சியில் ஒவ்வொரு பள்ளியில் இருந்தும் இரண்டு அறிவியல் ஆசிரியர்கள் பங்கேற்கலாம். இந்த ஒரு நாள் பயிற்சி முகாமில் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மாணவர்களை ஆய்வுக்கு தயார்படுத்தும் விதத்தில் ஒருங்கிணைந்த பயிற்சி வழங்கப்படும் ஆசிரியர்கள் தங்களுக்கான மதிய உணவை எடுத்து வரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட அரசு பள்ளிகள் , அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் என அனைத்துப் பள்ளிகளில் இருந்தும் இரண்டு இரண்டு ஆசிரியர்கள்

வழி காட்டி ஆசிரியர் பயிற்சியில் பங்கேற்கும் வகையில் தாங்கள் அனைத்து பள்ளிகளுக்கும் கடிதம் அனுப்பி ஆவணசெய்ய கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.


தொடர்புக்கு:

ஒருங்கிணைப்பாளர்கள்

க. மலர்விழி 8778961607

அனிதா ஆனந்த 9841472551

Email. ID : tnsfsouthchennai@gmail.com


இவண்

க. மலர்விழி

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் CSC2024